

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டக்கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகத்தை வளர்த்தெடுத்த, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கண்டோன்மெண்ட் சி.சண்முகம் அவர்களின் மறைவையொட்டி அவரது உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அதுபோது அமைச்சர் தா.மோ.அன்பரசன், தயாநிதி மாறன் எம்.பி. உள்ளிட்ட கழக முன்னணியினர் உடனிருந்தனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு – புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மணமேல்குடி வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில்

# நாடாளுமன்றத் தேர்தலில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு விருதுகள்!

## அமைச்சர் எஸ் .ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை, ஆக. 31 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் மணமேல்குடி வடக்கு ஒன்றிய திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் மணமேல்குடி வசந்தம் திருமண மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மணமேல்குடி வடக்கு ஒன்றிய தி.மு.க. கழக செயலாளர் சக்தி. ராமசாமி தலைமை தாங்கினார். திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்ஆர். கே. கலைமணி, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ரம்யா பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், தமிழ்நாடு சட்டத் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கலந்து கொண்டு மணமேல்குடி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மணமேல்குடி வடக்கு ஒன்றிய பகுதிகளில் திமுக கூட்டணி வேட்பாளர் நவாஸ்கனிக்கு அதிக வாக்குகளை பெற்று தந்த கிருஷ்ணாஜி பட்டினம் ஊராட்சி திமுக நிர்வாகிகளுக்கு கலைஞர் விருதும், இரண்டாம் இடம் பெற்ற மும்பாலை ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகளுக்கு தளபதி விருதும், மூன்றாம் இடம் பெற்ற வெள்ளூர் ஊராட்சி திமுக நிர்வாகிகளுக்கு சின்னவர் விருதையும் வழங்கினார். மேலும் அதிக வாக்குகளை பெறுவதற்கு உறுதுணையாக இருந்த வாக்குச்சாவடி முகவர்கள், நாடாளுமன்றத் தேர்தலில் தன்னலம் பாராமல் உழைத்த தி.மு.க. தொண்டர்களுக்கும் அமைச்சர் எஸ்.ரகுபதி விருதுகளை வழங்கினார்.

கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் ஞான.இளங்கோவன், தி.மு.க. தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணிஇ.ஏ.கார்த்திகேயன், அறந்தாங்கி தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பொன்.கணேசன்,

அறந்தாங்கி நகர கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், மணமேல்குடி ஒன்றிய திமுக துணைச் செயலாளர்கள் வீரப்பன், மாலதி கணேசன், சக்திவேல், ஒன்றிய பொருளாளர் சாதிக், மாவட்ட பிரதிநிதிகள் கணேசன், குமரேசன்,

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் முத்துசாமி, தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதிராஜன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர்கள் ரமேஷ், செந்தில்வேலன், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் நாகராஜன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் களஞ்சியம் முஹம்மது நலீம் , புதுக்கோட்டை அறந்தாங்கி தொகுதி திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேலன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாரிமுத்து, துணை அமைப்பாளர் முகமது இம்தியாஸ் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### செய்தி - மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநர்

# எல். மணிமாறன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக. 31 -**

**செய்தி மக்கள் தொடர்புத் துறையின் முன்னாள் இணை இயக்குநர் எல். மணிமாறன் அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவரது மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.**



அது வருமாறு:

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநரும் எனது உறவினருமான எல்.மணிமாறன் அவர்களது திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவரது அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் - செய்திமக்கள் தொடர்பு துறையில் பல்வேறு பொறுப்புகளிலும் திறம்படப் பணியாற்றி யவர்.

அவரது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும் - அவருடன் பணியாற்றிய சக செய்தி மக்கள் தொடர்புத்துறை பணியாளர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### வரும் செப்டம்பர் 15 க்குள்

# இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வேண்டுகோள்!

நாமக்கல், ஆக 31 -

நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு வேலூர் ரோடு சி.ஹச்.பி காலனியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து சிறப்புரையாற்றினார்.

மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் ப.ராணி, மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணை செயலாளர் மு.பரமானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே. செல்வராசு, கு.பழனிவேல், ஜி.தங்கவேல், பி.பி.தனராசு, எம்.தங்கவேல், ஏ.பி. ஆர்.சண்முகம், என்.நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஆ. இளங்கோவன், நகர கழக செயலாளர்கள் டி. கார்த்திகேயன், அ.குமார், டி.விஜயகண்ணன், எஸ்.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் மு.திருமலை, ஆர்.கருணாநிதி,



எம்.ரமேஷ்பாபு, பி.முருகன், எம்.ராமலிங்கம், எஸ். ராமமூர்த்தி, எஸ்.பி.கார்த்திராஜ், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், கே. மயில்சாமி, எம்.சாந்தி, எம்.ராஜாராம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.நடேசன், டி.ரங்கசாமி, ஓ.ஆர்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.ரவிச்சந்திரன், திருநாவுக்கரசு (எ) எஸ்.ஆர். பழனியப்பன், பி.சிவக்குமார், ஆர்.வேலுமணி, எம்.இந்திராணி மயில்சாமி,

மற்றும் மாவட்ட இளைஞர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட சார்பு அணி தலைவர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் தலைமை கழகத்தில் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுள்ள அமெரிக்க ட்ரில்லியன் டாலர் பொருளாதார பயணத்தின் மூலம் தொழில் நிறுவனங்களின் முதலீடுகளைப் பெற்று வேலைவாய்ப்புகள் அதிகரித்து திராவிட மாடல் அரசின் சாதனைகள் தொடர வேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா, தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம் தோற்றுவிக்கப்பட்ட நாள் ஆகிய முப்பெரும் விழா வருகின்ற செப்டம்பர் 15 ஆம் தேதி சென்னையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளவது,

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி கழக முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாடிடும் விதமாக அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் பொது உறுப்பினர் கூட்டம் நடத்திட வேண்டும்,

வருகின்ற 12.09.2024 அன்று பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மற்றும் வனத் துறை அமைச்சர் மா.மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைக்க உள்ளதால், தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்,

ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி நிர்வாகிகளின் பட்டியலை செப்டம்பர் 15ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கவும், இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி உறுப்பினர் படிவங்களை உடனடியாக மாவட்ட கழக அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு வேலூர் ரோடு சி.ஹச்.பி காலனியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து சிறப்புரையாற்றினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

# வேப்பூர் தெற்கு ஒன்றிய தி.மு.க.சார்பில் - குன்னத்தில் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை!

பெரம்பலூர், ஆக. 31 -

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, வேப்பூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழா பொதுக்கூட்டம், குன்னம் கிராமத்தில் நடைபெற்றது. வேப்பூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சி.ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.பிரபாகரன் வரவேற்புரையாற்றினார்.

வேப்பூர் ஒன்றிய குழுத் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, ஒன்றிய அவைத்தலைவர் அண்ணா கந்தசாமி, ஒன்றிய துணை செயலாளர்கள் ஏ.கே.பாலுசாமி, டி.ஞானசேகரன், ஒன்றிய பொருளாளர் எஸ்.பி.கண்ணன், மாவட்ட பிரதிநிதிகள் ஏ. எம்.எஸ்.தர்மராஜ், எம். சி.புகழேந்தி, ஆர்.கதிரவன், ஒன்றிய குழு உறுப்பினரும் ஒன்றிய துணை செயலாளருமான உமா சந்தோஷ்குமார், குன்னம் ஊராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி மதியழகன், குன்னம் கிளைச் செயலாளர்கள் க.ராமமூர்த்தி, சி. ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தமிழ்நாடு அரசு பாடநூல் வாரியத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி. எஸ்.பெரியசாமி, பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன்,அழகு. நீலமேகம்,

மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத்,

வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தி.மதியழகன், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.நல்லதம்பி, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், லெப்பைக் குடிக்காடு பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர் உசேன்,

மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி. காட்டு ராசா ,மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ. ரசூல்அகமது, மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க. ரமேஷ்,

மாவட்ட தொழிலாளர் முன்னேற்ற கவுன்சில் பேரவை செயலாளர் ஆர். ரெங்கசாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.செல்வம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வரகூர் ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல்,

மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் என்.முத்துச்செல்வன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ம.தமிழ்வேந் தன், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஜெ.சீனிவாசன் நன்றியுரையாற்றினார்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட எடப்பள்ளி ஊராட்சி இந்திரா நகர் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தை தமிழ்நாடு சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு,ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, குன்னூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி.சுனிதா நேரு, அரசு துறை அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.